1968 பிப்ரவரி 29]

and read the subject and afterwards the duration of the training could be reduced. Subsequently the Government did not consider it. Will the Hon. Minister be pleased to state whether he will think of introducing the subject in the high school course ?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : அவைத் தலைவர் அவர்களே, அதற்குத் தனிக் கேள்வி போட வேண்டும். இப்பொழுது அப்படிப் பட்ட உத்தேசம் இல்லை.

திரு. வி. கே. கோதண்டராமன் : சார், கனம் அமைச்சர் இந்த இராச்சியம் பூராவிலும் (115) பயிற்சிப் பள்ளிகள் இருப்பதாகக் கூறினார்கள். இவற்றில் பெரும் பகுதி தனியார் கையில் இருப்பதாகத் தெரிகிறது. ஆகவே, அவற்றில் பணம் கொடுக்கக்கூடியவர்களுக்குத்தான் இடம் கிடைக்கும் நிலைமைகள் இருந்து வருகின்றன என்பது கனம் அமைச்சருக்குத் தெரியும். இதையெல்லாம் உத்தேசித்து, அவற்றையெல்லாம் சர்க்கார்த் துறையிலேயே எடுத்து நடத்துவதற்கு உத்தேசம் உண்டா ?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : அவைத் தலைவர் அவர்களே, தனியார் துறையில் இருப்பதையெல்லாம் அரசாங்கமே எடுத்து நடத்துவது என்பது முடியாத காரியம். மேலும் பண வசதியும், மற்ற நிலைகளும் வரும்போது அதைக் கவனிக்கலாம். ஏதாவது குறைபாடுகள் இருந்தால், அவற்றைத் திருத்தவும், மாற்றி அமைக்கவும், செம்மைப் படுத்தவும் எப்பொழுதும் சர்க்கார் நடவடிக்கை எடுக்கும்.

திரு. ஆர். நாகசுந்தரம் : ஐயா, பேஸிக் பயிற்சிப் பள்ளிகள் சரிவர நடைபெறவில்லை என்பது தெரிந்திருப்பதால், அத்தனை பள்ளிகளையும் நான்-பேஸிக் பள்ளிகளாக மாற்றியமைக்க வேண்டும் என்கிற உத்தேசம் சர்க்காருக்கு உண்டா?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : அவைத் தலைவர் அவர்களே, நான் முதலிலேயே குறிப்பிட்டேன், மெள்ள மெள்ள அந்த வகையில் மாற்றிவரும் முயற்சியில் அரசாங்கம் ஈடுபட்டிருக்கிறது என்று.

கூட்டுறவு நூற்பாலைகள்

* 102 வினு—**திரு. பெ. மலைச்சாமி :**
திரு. வி. கே. கோதண்டராமன் : } மாண்புமிகு கல்வி-தொழில் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினுக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழகத்தில் உள்ள ஒவ்வொரு கூட்டுறவு நூற்பாலைக்கும் போட்ட மூலதனம் எவ்வளவு ?

(இ) ஒவ்வொன்றிலும் 1966–67-ம் ஆண்டுக்குரிய லாபம், நட்டங்கள் எவ்வளவு ?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : (அ) and (இ) சட்டப் பேரவைமுன் ஓர் விவர அறிக்கை a சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. கோதண்டராமன்—

திரு. பெ. மலைச்சாமி : தலைவர் அவர்களே, பொதுவாக இந்த ஆலைகள் சம்பந்தமாக . . .

THIRU K. VINAYAKAM : Is the hon. Member Thiru V. K. Kothandaraman or Thiru Malaichami ? You were pleased to call Thiru Kothandaraman, but Thiru Malaichami is putting a question. He is flouting your orders.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அவர்கள் பாயின்ட் ஆப் ஆர்டர் எழுப்பிவிட்டதால், திரு. கோதண்டராமன் அவர்களே, கேட்கட்டுமே.

---

a 221–222-ம் பக்கங்களில் இணைப்பாக அச்சிடப்பட்டுள்ளது.

திரு. வி. கே. கோதண்டராமன் : சார், கூட்டுறவு நூற்பாலைகளிலே சர்க்கார் போட்டிருக்கும் மூலதனம் எத்தனை ஆலைகளில் பரிபூரணமாக கொடுக்கப்பட்டுள்ளது. எத்தனை ஆலைகளில் கொடுக்கப்படவில்லை என்பதைச் சொல்ல முடியுமா ?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : அவைத் தலைவர் அவர்களே, 1966–67-ம் ஆண்டுக்கான கணக்குகள் முற்றுப்பெறவில்லை. அவை முற்றுப்பெற்ற பிறகு, இலாப நட்டம் என்ன என்பது தெரியும். அதன் பிறகு விவரங்கள் கொடுக்க முடியும்.

திரு. பெ. மலைச்சாமி : தலைவர் அவர்களே, பொதுவாக இந்த ஆலைகள் பொறுத்தவரையில், நட்டம் ஏற்படுவது என்பது உண்மையா ? அப்படி உண்மையாயின், நட்டத்திற்குக் காரணம் உற்பத்தி செய்யப்படும் நூல்களின் தரக் குறைவாலா அல்லது தேவையற்ற செலவுகள் என்பதாலா ?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : அவைத் தலைவர் அவர்களே, ஆண்டிற்கான லாப நட்டக் கணக்குகள் வந்தபிறகு இவை பரிசீலிக்கப்படும்.

திரு. எஸ். அக்னிராஜு : தலைவர் அவர்களே, நம் மாநிலத்தில் சில கூட்டுறவு நூற்பாலைகளில் மானேஜிங் டைரக்டர் என்று ஒரு பதவியிருக்கிறது. அதற்கு ஐ.ஏ.எஸ். ஆபீசர்களையே போடுகிறார்கள். அதனால் வருஷத்திற்கு 20, 25 ஆயிரம் ரூபாய் செலவாகிறது. அதைவிடுத்து, 'டெக்னிகலி க்வாலிபைட்' என்கிற வேறு சில அதிகாரிகளை நியமிக்க அரசாங்கத்திற்கு உத்தேசம் உண்டா ?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : அவைத் தலைவர் அவர்களே, அவசியத்தைக் கருதி ஐ.ஏ.எஸ். ஆபீசர்களையும், சில இடங்களில் டி. ஆர். ஓ. வையும் நியமிக்கிறார்கள்.

திரு. ஆர். பொன்னப்ப நாடார் : சார், அமைச்சரவர்கள் தந்திருக்கும் விவரத்தில் கன்னியாகுமரி மாவட்டக் கூட்டுறவு ஆலைக்கு ரூ. 14 லட்சம் சர்க்கார் பங்கு என்றிருக்கிறது. அது குறைவாக இருப்பதால் ஆலை இயங்குவதில் சிரமம் இருக்கிறது. ஆகவே, அரசாங்க மூலதனத்தை உயர்த்திகொடுக்க ஏதாவது உத்தேசம் உண்டா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : அவைத் தலைவர் அவர்களே, அதுபற்றி விண்ணப்பம் அந்த நூற்பாலையிலிருந்து அரசாங்கத்திற்கு வந்தால், அதுபற்றிப் பரிசீலிக்கப்பட்டு, தக்க நடவடிக்கை எடுக்கலாம்.

திரு. ஏ. முனியாண்டி : தலைவர் அவர்களே, புதிதாகக் கூட்டுறவு நூற்பாலைகள் ஏற்படுத்தும் உத்தேசம் சர்க்காருக்கு உண்டா ?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : தனிக் கேள்வி வேண்டும்.

திரு. வி. எஸ். எஸ். மணி : சார், பொதுவாக நூற்பாலைகளில் வெள்ளை நூல்தான் தயாரிக்கப்பட்டு, வினியோகிக்கப்பட்டு வருகிறது. அதற்குப் பதிலாக, ரசாயன முறையில் சாயம்போட, ஒவ்வொரு நூற்பாலையிலும் ஒரு "டை-ஹவுஸ்" சாயம் ஏற்றும் வகைசெய்து, கலர்ட் யார்ன், சாயம் போட்ட நூல்களைக் கொடுக்க ஏற்பாடு செய்தால், நட்டம் இருந்தாலும், அது நட்டத்தைச் சரிக்கட்ட ஏதுவாக இருக்கும். ஆகவே, இந்த முறையைச் சர்க்கார் மேற்கொள்ளுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : கனம் உறுப்பினர் கருத்து ஏற்றுக்கொள்ளப்பட்டு, அதன் காரணமாக இலாபம் இருந்தால், பயன் இருந்தால் அந்தக் கருத்து தொடர்ந்து ஆராயப்படலாம்.

1968 பிப்ரவரி 29]

திரு. டி. மார்டின் : நெல்லை மாவட்டத்தில் நாசரத் என்னும் ஊரி லுள்ள கூட்டுறவு நூற்பு ஆலையில் இலங்கையிலிருந்து வருகின்றவர்களுக்கு அதிகமாக வேலை வாய்ப்புக் கொடுக்கும்படியான உத்திரவைத் தமிழக அரசு ஏற்கனவே பிறப்பித்து இருக்கிறதா ? இல்லையென்றால், அதுபற்றிக் கவனிக்க இந்த அரசு முற்படுமா ?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : அப்படிப்பட்ட உத்தரவு பிறப்பிக்கப்பட்டதா எனபதற்கான விவரக் குறிப்பு இல்லை. தனிக் கேள்வி போட்டால் விடை அளிக்கலாம். இலங்கையிலிருந்து வருகின்றவர்களுக்கு வேலை வாய்ப்பு அளிக்கக்கூடிய முறையில் ஒரு நூற்பு ஆலை துவங்கலாமா என்பதுபற்றி ஒரு கருத்துரை இருந்து வருகிறது. அது பரிசீலிக்கப்பட்டு வருகிறது.

திரு. சி. கிருஷ்ணமூர்த்தி : தஞ்சை மாவட்டத்தில் மணல்மேடு என்ற ஒரு கிராமத்தில் பல லட்சக்கணக்கான ரூபாய்களைப்போட்டு, நூற்பாலை ஒன்றை அமைத்து, அங்கே சீதோஷ்ண நிலை சரியில்லாத காரணத்தால், அதை மீண்டும் செப்பனிடுவதற்குப் பல லட்ச ரூபாய் தேவைப்படுகிறது என்பது சர்க்காருக்குத் தெரியுமா ? அதற்கான நடவடிக்கை ஏதாவது எடுக்கப்படுமா ?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : அதுபற்றிய விவரக் குறிப்பு இல்லை.

திரு. தி. தீர்த்தகிரி கவுண்டர் : தர்மபுரி மாவட்டத்தில் கூட்டுறவு நூற்பு ஆலையொன்றை அமைப்பதற்கான பரிசீலனை நடைபெற்றிருப்ப தாகத் தெரியவருகிறது. மேற்படி மாவட்டத்தில் கூட்டுறவு நூற்பாலை யொன்றை அமைக்க சர்க்கார் தக்க நடவடிக்கை எடுக்குமா ?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : அதுபற்றிய விவரக் குறிப்பு இல்லை. தனிக் கேள்வி போட்டால் விவரம் சேகரித்துத் தர முடியும்.

திரு. ஜி. ஆர். எட்மண்ட் பெர்னாண்டோ : தமிழகத்தில் உள்ள கூட்டு றவு நூற்பு ஆலைகளில் எத்தனை ஆலைகள் இலாபத்தில் ஓடிக்கொண்டிருக் கின்றன ? எத்தனை ஆலைகள் இழப்பில் ஓடிக்கொண்டிருக்கின்றன? இலாபத் தில் ஓடிக்கொண்டிருந்தால், மிகச் சிறந்த ஆலை எது என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : நான் முதலிலேயே குறிப் பிட்டேன். இலாப-நட்டக் கணக்கு இப்பொழுது தணிக்கை செய்யப்பட்டு வருகிறது. அது வந்த பிறகுதான் எத்தனை ஆலைகள் இலாபத்தில் ஓடிக் கொண்டிருக்கின்றன, எத்தனை ஆலைகள் நட்டத்தில் ஓடிக்கொண்டிருக் கின்றன என்ற விவரங்களைத் தர இயலும்.

திரு. பெ. சௌந்தரபாண்டியன் : இந்தக் கூட்டுறவு நூற்பாலைகளைக் கண்காணிப்பதற்குக் குழு ஏதாவது அமைக்கப்பட்டுள்ளதா ? அது எந்த அடிப்படையில் அமைக்கப்பட்டுள்ளது ?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : குழு அமைக்கப்பட்டிருப் பதாகத் தெரியவில்லை. அதுபற்றித் தனிக் கேள்வி போட்டால், குழு அமைக்கப்பட்டதா என்று சொல்லலாம்.

திரு. எஸ். இராமச்சந்திரன் : கைத்தறி நெசவாளர்களுக்குக் குறைந்த விலையில் நூல் கிடைப்பதற்காக இந்தக் கூட்டுறவு ஆலைகள் ஏற்படுத்தப்பட்டன. ஆகவே, வெளி மார்க்கெட்டில் ஏற்கனவே நூல் விற்ற விலையைவிட, கூட்டுறவு நூற்பு ஆலைகளின்மூலம் விற்கப்படுகிற நூலின் விலை குறைந்திருக்கிறதா ?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : அந்த நோக்கத்தின் அடிப் படையில்தான் நூற்பு ஆலைகள் ஏற்படுத்தப்பட்டன. கைத்தறி நெசவாளர் களுடைய கோரிக்கையை ஓரளவுக்கு நிறைவேற்றுகிற வகையிலேதான் இப் பொழுது அந்த ஆலைகள் நடைபெற்றுக்கொண்டு வருகின்றன. ஆகவே நூலின் விலை குறைந்த அளவிலேதான் இருந்து வருகிறது.

திரு. தோ. மு. நல்லசாமி : தலைவர் அவர்களே, சர்க்கார் முதலீடு என்ற வகையில் ஒருசில ஆலைகளுக்குக் குறைந்த முதலீடும், மற்றும் சில ஆலைகளுக்கு அதிக முதலீடும் அரசாங்கம் செய்து இருக்கிறது. இதில் ஆரம்பக் காலத்தில் 12,500 ஸ்பின்டில்கள் உள்ள ஆலை வைப்பதாகச் சொல்லிக்கொண்டிருந்தார்களே, பிறகு அதில் அதிக ஸ்பின்டில்கள் இயங்கிக்கொண்டிருக்கின்றனவா?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : அதுபற்றிய விவரக் குறிப்பு இல்லை. தனிக் கேள்வி போட்டால் விவரம் தரப்படும். 12,500 ஸ்பின் டில்களுக்குப் பதிலாக 25,000 ஸ்பின்டில்கள் இருக்குமானல், அது அதிக லாபகரமாக இருக்க முடியும் என்ற கருத்து தெரிவிக்கப்பட்டிருக்கி றது. கூடுமானவரையில், ஸ்பின்டில்களின் எண்ணிக்கையை அதிகப்படுத் துகிற முயற்சிகள் சிலபல ஆலைகளில் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன. சிலபல ஆலைகளில் அத்தகைய முயற்சி மேற்கொள்ளப்படவில்லை. ஆனால், இந்த விவரக் குறிப்பு தனிக் கேள்வி போட்டால் தரலாம்.

திரு. சரு. சிமைச்சாமி : அமைச்சர் அவர்கள் பதில் சொல்லுகிற போது, தணிக்கை அறிக்கை வந்தபிறகுதான், இலாபமா, நட்டமா என்று தெரிவிக்கலாம் என்று குறிப்பிட்டார்கள். 1966-67-ம் ஆண்டுக்கான கணக் குப்பற்றி கேள்வி கேட்கப்பட்டிருக்கிறது. கணக்கு தணிக்கை செய்யப்பட்டு, இட்டதட்ட ஓராண்டுக்காலம் ஆகியிருக்கும். தணிக்கை அறிக்கை அரசாங்கத் திற்கு இன்னும் வராததற்கான காரணம் என்ன? ஏதாவது ஊழல் நடந்திருக்கிறதா? கூட்டுறவு என்றாலே ஊழல்தான். இனிமேலாவது இம்மாதிரிக் கூட்டுறவுத் துறையில் செலவு செய்வதை அரசாங்கம் நிறுத் துமா?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : அதுபற்றித் தனிக் கேள்வி போட்டால், ஆராயப்பட்டு கூறப்படும்.

திரு. நா. கிருட்டிணன் : தமிழகத்தில் அமைக்கப்பட்டுள்ள கூட்டுறவு நூற்பு ஆலைகள் ஒவ்வொன்றிலும் 12,500 கதிர்கள் அமைக்கப்படுவதாகக் கூறப்படுகிறது. ஒவ்வொரு நூற்பாலையிலும் அந்த 12,500 கதிர்களும் இயங்குகின்றனவா? அப்படி இயங்காவிட்டால், அதற்குரிய காரணங்கள் என்ன என்பதைக் கண்டறிந்து, அதற்குரிய பரிகாரம் தேடப்படுமா ?

(விடை இல்லை.)

திரு. எம். சுரேந்திரன் : நூற்பாலைகளிலெல்லாம் நெருக்கடியாக இருக்கிறது என்று எல்லா இடங்களிலும் பேசிக்கொள்ளப்படுகிறது. அப் படி நூற்பாலைகள் மூடிக் கிடக்கின்ற இந்த நிலையில், மீண்டும் கூட்டுறவு நூற்பாலைகளை அதிகப்படுத்துவதன்மூலம், நெருக்கடி மேலும் அதிக மாகாதா? கூட்டுறவுத் துறையில் நூற்பாலைகள் அமைப்பது நெசவுத் தொழிலாளிகளுக்கு உதவியாக இருக்கவேண்டும் என்பதற்காக என்று சொல்லப்பட்டு அமைக்கப்பட்டன. ஆனால், உண்மையிலேயே அத்தகைய பலன் அவர்களுக்குக் கிடைக்கிறதா?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : பொதுவாக நூற்பு ஆலை களிலும், நூல் விலை, பஞ்சு விலை ஆகியவற்றிலும் ஒரு நெருக்கடி இருந்து வருகிறது. இருந்தாலும், கூட்டுறவு நூற்பு ஆலைகள் இருக்கும் காரணத் தினால்தான், கைத்தறி நெசவாளர்களுக்குக் குறைந்த விலையிலே நூல் கிடைக்க வசதி வாய்ப்பு இருந்துகொண்டிருக்கிறது. அதை எந்த முறையில் இன்னும் செம்மைப்படுத்தலாம் என்று யோசித்துக் கொண்டி ருக்கிறோம். புதிய நூற்பு ஆலை துவக்குவதா, வேண்டாமா என்பதும் பரிசீலனையில் இருந்து வருகிறது. புதிதாகத் துவக்குவதனால் பலன் ஏற்படுமென்றால், அதுபற்றி விரிவான நடவடிக்கை எடுக்கப்படும்.

திரு. ரா. கிருஷ்ணசாமி கவுண்டர் : கூட்டுறவு நூற்பாலைகளுக்குப் பஞ்சு வாங்கும் முறையில் ஒழுங்கில்லாமல் இருப்பதால், தனியார் நடத் தும் ஆலைகள் பஞ்சு வாங்க முடியாத நிலையில், அவர்களுக்கு நட்டம் வருகிறது. அவர்களும் பொறுப்பு இல்லாமல் வாங்குகிறார்கள் என்பதை மாண்புமிகு அமைச்சரவை உணருமா?

(விடை இல்லை.)

1968 பிப்ரவரி 29]

மாண்புமிகு பேரவைத்தலைவர் : "அமைச்சரவை உணருமா" என்று தாங்கள் கேட்கிறீர்கள். அமைச்சரவைக்குத் தாங்கள் உணர்த்தவேண்டுமானால், நிதிநிலை அறிக்கையின் மீதான பொது விவாதத்தின்போது—அது சற்று நேரத்தில் தொடங்க இருக்கிறது—செய்யலாம். இப்பொழுது கேள்வி நேரத்தில் தகவல் (Information) கேளுங்கள்.

The question time is for the purpose of eliciting information.

திரு. ஆர். என். அரங்கநாதன் : கூட்டுறவுத் துறையில் உள்ள நூற்பாலைகளைக் குறித்து ஆராய்ந்தறிய கமிட்டி நியமிக்கும் உத்தேசம் அரசாங்கத்திற்கு உண்டா?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : இப்பொழுது அந்த உத்தேசம் இல்லை.

திரு. க. இராமமூர்த்தி : தென்னாற்காடு மாவட்டத்திலுள்ள, சாரம் கூட்டுறவு நூற்பு ஆலையில், மற்ற நூற்பு ஆலைகளைவிட, அதிகமாக இலாபம் கிடைப்பதாகத் தகவல் கிடைத்திருக்கிறது. அந்த ஆலையில் வேலை செய்யக்கூடிய தொழிலாளர்களை ஊக்குவிக்கும் வகையில் அந்த இலாபத்திற்குத் தகுந்தபடி, இன்ஸெண்டிவ் போனஸ் கொடுப்பதுபற்றி அரசாங்கம் பரிசீலனை செய்யுமா?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : அந்த நூற்பு ஆலையைப் பற்றி விவரக் குறிப்பு இங்கே இல்லை. அப்படி இலாபம் இருந்து, போனஸ் கொடுக்கவேண்டிய நிலை இருக்குமானால், அதுபற்றி கவனத்திற்குக் கொண்டுவரப்படுமானால், தக்க நடவடிக்கை எடுக்கலாம்.

திரு. எஸ். முருகையன் : கூட்டுறவு நூற்பு ஆலைகளுக்கு டைரக்டர்களை நியமிக்கும்போது, கூட்டுறவு நெசவாளர்கள் சங்கங்கள் பிரதிநிதிகளை நியமிக்கவேண்டும் என்று நியதி இருக்கிறது. பெரிய நெசவாளர்கள் சங்கங்களின் பிரதிநிதிகளை நியமிக்கும்போது, அதிலே டைரக்டர்களாக இருப்பவர்களை மட்டும் நியமிக்கிறார்கள். அப்படி நியமிக்கும்போது, கைத்தறி நெசவாளர்களையும், நூலைப்பற்றித் தெரிந்தவர்களையும் நியமிக்க இந்த அரசாங்கம் ஏற்பாடு செய்யுமா?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : நூலைப்பற்றித் தெரிந்தவர்களை டைரக்டர்களாக நியமிக்கவேண்டும் என்பதிலே பொருள் இருக்கிறது. ஆனால், நெசவாளர்களுக்கு மட்டும்தான் தெரியும், மற்றவர்களுக்குத் தெரியாது என்று சொல்லுவதற்கில்லை. யாராக இருந்தாலும், அதில் நிபுணத்துவம் இருந்தால், அவர்கள் டைரக்டர்களாக இருந்து தக்க ஆலோசனை கூறலாம்.

திரு. வி. கே. கோதண்டராமன் : இந்தக் கூட்டுறவு நூற்பு ஆலைகள் பலவும் அநேகமாக ஆதாயத்தில்தான் இருக்கின்றன. 1966–67-ம் ஆண்டுக்கான ஆடிட் ரிபோர்ட்டின்படி, வேலூர் நூற்பு ஆலையில் 7 லட்ச ரூபாய் இலாபம் வந்திருக்கிறது. அப்படியிருந்தும், டிவிடெண்டு கொடுக்கவில்லை. அந்த ஆலையில் வேலை செய்யும் தொழிலாளர்களுக்குக் குறைந்த அளவு கூலிதான் கொடுக்கப்படுகிறது. அங்கே விற்கப்படும் நூலின் விலையும் அதிகமாக இருக்கிறது. கைத்தறி நெசவுத் தொழிலாளர்களுக்குக் குறைந்த விலையில் நூல் கொடுக்க ஏன் அங்கே ஏற்பாடு செய்ய முடியவில்லை ?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறிய விவரங்களைக் குறித்துத் தனியாக எழுதிக் கொடுத்தால் அதுபற்றிய நிலைமைகள் என்ன என்று ஆராய்ந்து அறிந்து, தக்க நடவடிக்கை எடுக்கலாம்.

திரு. ஆர். பொன்னப்ப நாடார் : நூற்பு ஆலைகளில் அதிகமாக நூல் தேங்கியிருக்கும் காரணத்தால், விசைத் தறிகள் (பவர் லூம்ஸ்) ஓட்டுவதற்கு அரசாங்கத்திற்கு உத்தேசம் ஏதாவது உண்டா? கூட்டுறவுத் துறையில் அப்படி விண்ணப்பங்கள் வந்தால், அவை பரிசீலிக்கப்படுமா?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : 12,500 விசைத் தறிகள் இந்த மாநிலத்தில் வைக்க அனுமதி கிடைத்திருக்கிறது. விசைத் தறிகளை வைத்தால் கைத்தறித் தொழில் பாதிக்கப்படுமோ என்று கைத் தறி நெசவில் ஈடுபட்டிருப்பவர்களும், மற்றவர்களும் மறுப்பு தெரி வித்தனர். மற்ற மாநிலங்களில் விசைத் தறிகளுக்கு அதிக இடம் கொடுத்து, விசைத் தறிகளின் மூலம் உற்பத்தி செய்த ஆடை இந்த மாநிலத்தில் வந்து இறக்குமதி ஆகின்றது. அதைத் தடுத்து நிறுத்துவதற்கு வழி இல்லை. ஆகவே, இங்கிருக்கும் விசைத் தறிகளைப் பயன்படுத்தாமற் போனுல், மற்றவர்கள் அவற்றைப் பயன்படுத்தி, அவற்றின் மூலமாக நெய்யும் ஆடைகளை இங்கே கொண்டுவந்து விற்பனை செய்வதன் மூலம் அவர்கள் லாபம் அடையக்கூடும். ஆகவே இங்கேயும் விசைத் தறிகளைப் பயன்படுத்தவேண்டும் என்ற உணர்வும் இருக்கிறது. இப்பொழுது கூட்டுறவுத் துறையில் விசைத் தறிகளைப் பயன் படுத்தலாம். அதிலே வரும் லாபத்தைப் பயன்படுத்தலாம். இன்ன இன்ன ரகங்கள் கைத்தறிகளுக்கு ஒதுக்கப்பட வேண்டும், இன்ன இன்ன ரகங்கள் விசைத் தறிகளுக்கு ஒதுக்கப்பட வேண்டும் என்று வரையறைகள் செய்வதுபற்றி யோசனை கூறப்பட்டிருக்கிறது. அது பரிசீலனையில் இருந்து வருகிறது. கூடுமானவரையில் பாதி அளவுக்காவது கூட்டுறவுத் துறை யில் அதை ஒப்படைக்கலாமா என்ற எண்ணம் இருக்கிறது. பரிசீலனை முடிந்த பிறகு, தக்க நடவடிக்கை எடுக்கலாம்.

திரு. கே. விநாயகம் : தலைவர் அவர்களே, கூட்டுறவு நூற்பாலைகளுக்கு டைரக்டர்களையும், மானேஜர்களையும் நியமிக்கும் உரிமை அரசாங்கத்திற்கு
மு.ப. 9-30 இருக்கிறது. இந்த ஆண்டிலே யார் யாருக்கு பதவிக்காலம் முடிந்து விட்டதோ அவர்களையெல்லாம் நீக்கிவிட்டு, அந்த இடங்களில் ஆட்சியிலே இருக்கிற கட்சிக்காரர்களுக்கு, அவர்களுடைய அனுதாபிகளுக்கு கட்சி அங்கத் தினர்களுக்கு மட்டும் இடம் அளித்திருப்பதாகக் கேள்விப்படுகிறேன். அது உண்மையா? கூட்டுறவு இயக்கத்தில் அரசியலைப் புகுத்துவது நியாயமா என்று அறிய விரும்புகிறேன் ?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு உறுப்பினர் கூறுவதிலே உண்மை இல்லை. பழைய முறையிலும் இது கடைப்பிடிக்கப் படவில்லை. இருக்கிற நிலைமைகளையெல்லாம் ஆராய்ந்து பட்டியலைப் பார்த் தால், குறிப்பிட்ட அரசியல் கட்சியினர் மட்டும் இருக்கிறுர்கள் என்று சொல்ல முடியவில்லை. எல்லாக்கட்சிக்காரர்களும் அதில் இருக்கிறுர்கள். இப்போதிருக்கிற யாரையும் நீக்கிவிட்டுச் செய்கிற முறையில் இல்லை. பதவிக்காலம் முடிந்து விட்ட இடங்களுக்கு புதிய டைரக்டர்களை நியமிக்கும் நிலைமை பரவலாக இருக்கிறது.

திரு. சி. கோவிந்தராசன் : தலைவர் அவர்களே, இதற்கு முன்பிருந்த சர்க்கார் கூட்டுறவுத் துறையிலே போட்ட டைரக்டர்கள் அத்தனை பேரும் காங்கிரஸ்காரர்கள் என்பதும், நண்பர் திரு. மலைச்சாமி அவர்கள் சொன்னது போல், "கூட்டுறவு என்றுலே ஒரு கொள்ளைக்கூட்டம்" என்று பேர் வாங்கும் நிலைமையில் இருப்பதும் அரசாங்கத்திற்குத் தெரியுமா ? அதைத் திருத்தி நல்லமுறையில் இயங்க அரசாங்கம் நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இந்த வினுவை அனுமதிக்க முடி யாததற்கு வருந்துகிறேன். இந்த வினுவில் குற்றச்சாட்டுக்கள் இருக் கின்றன. வினு நேரத்தில் குற்றச் சாட்டுக்கள் கூற முடியாது. பொது விவாத நேரத்தின்போதுதான் குற்றச்சாட்டுக்கள் கூறமுடியும். அடுத்த வினு. 103.

சாலை அகலப்படுத்தும் திட்டம்

*103 வினு—**திரு. எஸ். ஜே. ராமசாமி :** மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினுக்களுக்கு விடை அளிப் பாரா—

(அ) திருநெல்வேலி நகரத்தில் பாதையை அகலப்படுத்தும் திட்டத்தின் கீழ் மரங்கள் ஏதேனும் வெட்டப்பட்டுள்ளனவா ?